# மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு செல்ல கூடுதல் மினி பஸ்

## போக்குவரத்துக்கழகம் ஏற்பாடு

சென்னை, ஜூலை.30–

சென்னை மெட்ரோ ரெயில் நிலையங்களுக்கு ஷேர் ஆட்டோ, ஷேர் டாக்சி சேவையும், மாநகர போக்குவரத்து கழகத்தின் சார்பில் மினிபஸ் வசதியும் செய்யப்பட்டுள்ளது. கோயம்பேடு, புறநகர் பஸ் நிலையம், வடபழனி, அசோக்நகர், ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து பல்வேறு பகுதிகளுக்கு 14 மினி பஸ்கள் இயக்கப்பட்டு வருகின்றன. பயணிகள் நலனை கருத்தில் கொண்டு மேலும் 5 வழித்தடங்களில் கூடுதலாக 11 மினி பஸ்களை இயக்க மாநகர போக்குவரத்து கழகத்தை மெட்ரோ ரெயில் நிர்வாகம் கேட்டுக்கொண்டது.

இதைத்தொடர்ந்து நேற்று முதல் கூடுதலாக 11 மினி பஸ்கள் இயக்கப்பட்டன. இந்த மினிபஸ்கள் 20 நிமிட இடைவெளியில் வண்ணாரப்பேட்டை, எல்.ஐ.சி., ஏ.ஜி. டி.எம்.எஸ்., ஆலந்தூர் மெட்ரோ ரெயில் நிலையங்களில் இருந்து எழும்பூர், நுங்கம்பாக்கம் ரெயில் நிலையம் போன்ற பல்வேறு பகுதிகளுக்கு இயக்கப்படுகின்றன.